2015 செப்டம்பர் 2]

எடுத்துக்கொள்ளப்பட்டு, வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு மனப்பான்மையும், தொலைநோக்குப் பார்வையும் ஓட்டுக்காக அல்ல, நாட்டுக்காக என நாட்டை ஆள்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மீன் வளத் துறையின் மூலமாக பரிசீலனை செய்து, வாய்ப்பு இருப்பின், மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடு கட்டித் தருவதற்கும், வணிக வளாகம் கட்டித் தருவதற்கும் ஆவன செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

208—

புயல் பாதுகாப்பு இல்லங்கள்

***52289 திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள முதலைமேடு ஊராட்சி மற்றும் சந்தைப்படுகை, பில்படுகை, நாணல்படுகை ஆகிய கிராமங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, முதலைமேடு ஊராட்சி மற்றும் பில்படுகை, சந்தைப்படுகை, நாணல்படுகை ஆகிய கிராமங்களுக்கு அருகில் உள்ள திருமயிலாடி வருவாய் கிராமம், அனுமந்தபுரத்தில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு அரசு புறம்போக்கு நிலத்தில் புல எண்கள் 693/12, 13 மற்றும் 16 ஆகியவற்றில் முறையே 520 சதுர மீட்டர், 475 சதுர மீட்டர் மற்றும் 280 சதுர மீட்டர், ஆக மொத்தம் 1,275 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதற்கான மதிப்பீட்டு அறிக்கையினைப் பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்ற பின்னர், இப்பொருள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, விவேகத்தால் விதை விதைத்து, விருட்சங்கள் அனைத்தையும் சுபிட்சங்களாக்கி, வெளிச்சமாய், விலாசமாய், அன்னைத் தமிழ் மண்ணுக்குக் கிடைத்த அரசியல் வசந்தமே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஐவகை நிலம் சூழ, அழகோடு பூத்த அமிர்தமான நாட்டுக்கு அரசாளப் பிறந்தவரே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தேசம் காத்திட தேன் தமிழ் ஈன்ற திராவிடத்துப் பாதையே, வானத்துப் பிறையே, வாகை சூடும் வளர் தமிழே, மக்கள் திலகம் தந்த சொக்கத் தங்கமே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) கருவில் உள்ள குழந்தைகள்மீதும் கருணை கொண்ட தாயே, வலியோர், எளியோர், முதியோரும் வாழ்வு பெற அம்மா திட்டம் தந்த அற்புதத் தாயே, கண் இமை சோராது உழைக்கின்ற கடமைக் காவலரே, உலகத் தமிழினமே கை கூப்பி வணங்கும் முதல்வரே அம்மா! நானும் உங்கள் தெய்வீகத் திருவடிகளை வணங்குகின்றேன் தாயே.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலைமேடு ஊராட்சியில் சுமார் 1,050 குடும்பங்கள் வசிக்கின்றன. முதலைமேடு

2015 செப்டம்பர் 2]

மற்றும் அதனைச் சுற்றியுள்ள சந்தைப்படுகை, பில்படுகை, நாணல்படுகை ஆகிய கிராமங்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இந்தக் கிராமங்கள் கொள்ளிடம் ஆற்றின் கரையை ஒட்டியிருப்பதால், மழை, வெள்ளம் மற்றும் புயல் காலங்களில் மக்கள் பாதுகாப்பாக தங்க நடுவக்கரை அணையின் மேலேயும், 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆச்சாள்புரம் பள்ளியிலும் தங்க வைக்கப்படுகின்றனர். ஆடு, மாடுகள் மற்றும் வீடுகளுக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கருதி, மக்கள் பாதுகாப்பான வேறு இடத்திற்கு வர மறுக்கிறார்கள். எனவே, முதலைமேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களின் நலன் கருதி, புயல் பாதுகாப்பு இல்லத்தை அந்தப் பகுதியிலேயே அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை வெள்ளக் காலங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டு, மேற்படி கிராமங்கள் வெள்ள நீரினால் சூழப்படும் சமயத்தில், இப்பகுதி மக்களின் பாதுகாப்பிற்காக சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புத்தூர், சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு வெள்ள நிவாரண உதவிகளைச் செய்து வருவது தொடர் நடவடிக்கையாக இருந்து வருகிறது. எனவே, மேற்படி சந்தைப்படுகை, பில்படுகை, நாணல்படுகை மற்றும் முதலைமேடு ஊராட்சி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள திருமயிலாடி கிராமத்தில் அனுமந்தபுரம் பகுதியில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டினால், அவர்களை வெள்ளக் காலங்களில் அப்புறப்படுத்தி தங்க வைப்பதற்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கும் என்பதால், மேற்படி கிராமங்களுக்கு மிக அருகிலே உள்ள திருமயிலாடி கிராமம், அனுமந்தபுரம் பகுதியில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைக்கப்படுவது அத்தியாவசியமாகும். அதேபோல, திருமயிலாடி வருவாய் கிராமத்தின் உட்கிராமங்கள்தான் நாணல்படுகை, திட்டுப்படுகை, சந்தைப்படுகை கிராமங்கள் மற்றும் முதலைமேடு ஊராட்சி. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் தொகையையும்*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைப்போல மக்கள்தொகை இருக்கிறது. ஆனால், கொள்ளிடம் ஆற்றங்கரையிலிருந்து நாணல்படுகை8 கிலோ மீட்டர் தொலைவிலும், திட்டுப்படுகை 12 கிலோ மீட்டர் தொலைவிலும், சந்தைப்படுகை 7 கிலோ மீட்டர் தொலைவிலும், முதலைமேடு 9 கிலோ மீட்டர் தொலைவிலும் இருக்கின்றன.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: ஆனால், திருமயிலாடி கிராமம், சந்தைப்படுகை கிராமத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலும், நாணல்படுகை கிராமத்திலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்திலும் மற்றும் முதலைமேடு கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்கின்றவகையில், திருமயிலாடி கிராமம், அனுமந்தபுரம் உட்கிராமத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைத்தால், அது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். அந்த முடிவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த இடத்திலே புயல் பாதுகாப்பு இல்லம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான பதிலை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சி, மடத்துக்குப்பம் கிராமம் மற்றும் தென்னாம்பட்டினம் ஊராட்சி, கீழமூவர்கரை கிராமங்களிலுள்ள மக்கள் கடலோரப் பகுதிகளில் வசிப்பதால், புயல் மற்றும் மழைக் காலங்களில் அங்கு தங்குவதற்கு

2015 செப்டம்பர் 2]

பாதுகாப்பான இடம் இல்லாததால், மடத்துக்குப்பம் கிராமம் மற்றும் கீழமூவர்கரை மீனவக் கிராம மக்கள் தங்குவதற்கு தனித் தனியே புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலேதான் கடலோரத்திலே பாதுகாப்பற்ற வசிப்பிடங்களில் வாழ்ந்துவரும் மக்களை புயல் மற்றும் இதரவகை பேரிடர் காலங்களில் பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதன்மூலம் உயிரிழப்புகளைத் தவிர்க்க இயலும் என்ற உயர்ந்த நோக்கத்தில், கடலோர மாவட்டங்களில் இதுவரை இல்லாதவகையில் 121 இடங்களில் தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் ரூ.315 கோடியிலே கட்டப்பட்டு வருகின்றன என்பதை இந்தப் பேரவைக்குப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும், கடந்த காலங்களிலே புயல் பாதுகாப்பு இல்லம் என்று சொன்னால், பேரிடர் காலங்களில் மாத்திரம் அதாவது இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் பேரிடர் காலங்களில் மட்டும்தான் மக்களுக்குப் பயன்படும்படியாக அது இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் புயல் பாதுகாப்பு இல்லங்கள் பேரிடர் காலங்களில் மாத்திரம் அல்லாமல், வருடம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றன. புயல் பாதுகாப்பு இல்லங்களைப் பள்ளிக்கூடமாகவோ அல்லது சமுதாயக் கூடமாகவோ தொடர்ந்து ஆண்டு முழுவதும் அப்பகுதி மக்கள் பயன்படுத்துகின்றவகையிலே ரூ.315 கோடியில் 121 இடங்களில் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ள ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, 32 கட்டடங்களைக் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதர கட்டடங்களை கட்டும் பணியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*